# மீலாது, மௌலூது, மார்க்கம் சொல்வதென்ன?

ரபீஉல் அவ்வல் மாதத்தில், நாடெல்லாம் மீலாது விழாக்களும். பள்ளிகளிலும், வீடுகளிலும் மௌலூதுகளும் மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. இவற்றைக் கொண்டு இறைதிருப்தியும், நபி(ஸல்) ஷபாஅத்தும் தங்கள் உலகச் செயல்களில் கைரும், பரக்கத்தும் ஏற்படும் என்பது இன்றைய முஸ்லிம்களின் மூடநம்பிக்கையாகும். இவற்றை எல்லாம் மார்க்கமாகக் கொள்ள இவர்களுக்குச் சான்றுகள் எங்கிருந்து கிடைத்தன? என்பதை நாம் அறியோம். ஆனால் இவையெல்லாம் மார்க்கத்தில் உள்ளவை அல்ல. நபி(ஸல்) அவர்களால் கண்டிக்கப் பட்ட பித்அத்கள் என்பதற்குக் குர்ஆனிலிருந்தும், ஹதீஸுகளிலிருந்தும் பல சான்றுகள் கிடைக்கின்றன.

நபி(ஸல்) அவர்களது முதல் மீலாதைக் கொண்டாடியவன் இறைவனால் சபிக்கப்பட்ட அபூலஹப்! நபி(ஸல்) பிறந்தவுடன் மீலாது நடந்துள்ளது. அது நல்ல செயலாக இருந்திருந்தால், நபி(ஸல்) ஏற்று நடந்திருப்பார்கள். உம்மத்துக்கும் போதித்திருப்பார்கள். நடந்ததை விட்டிருக்கிறார்களென்றால், அது அறியாமைக்கால மூடப் பழக்கமாகத்தான் இருக்க வேண்டும். நபி(ஸல்) அவர்களால் ஒழிக்கப்பட்டு, நபித் தோழர்களால், தாபியீன், தபஉத் தாபியீன்களால், பெரியார்களால் கடைபிடிக்கப்படாமல், ஹிஜ்ரி 600-ல் எகிப்து அரசர் ‘இர்பல்’ என்பவரால், சில மூட முஸ்லிம்களின் **‘‘இயேசுவுக்குப் பிறந்தநாள் கொண்டாடும் போது, நபி(ஸல்) அவர்களுக்கு ஏன் கொண்டாடக்கூடாது?’’** என்ற பேச்சைக் கேட்டு தொடங்கப்பட்டதே இன்று நம்மவர்கள் எடுத்து நடத்தி வரும் மீலாதாகும். நம்மவர்கள் நபி(ஸல்) அவர்களைத் தங்கள் வழிகாட்டியாகக் கொள்ளவில்லை. அபூலஹபையும், இர்பலையும் வழிகாட்டிகளாக எடுத்துக் கொண்டுள்ளனர். இவர்கள் நிலை என்ன? சினங்கொள்ளாமல் சிந்தித்து விளங்கிக் கொள்க.

**‘‘நாம், உமது புகழை உயர்த்தி விட்டோம்.’’**

*அல்குர்ஆன் 94:4*

“பனூ ஆமிர் தூதுக்குழுவுடன் நானும் நபி(ஸல்) அவர்களிடம் சென்றிந்தேன். அப்போது நாங்கள் அவர்களை நோக்கி, ‘நீங்கள் எங்களின் தலைவர்’ என்று கூறினோம். அதற்கு அவர்கள், ‘தலைவன் அல்லாஹ்வே!’ என்று கூறினர். “தாங்கள் எங்களைவிட ‘மாண்பு மிக்கவர், பெரும் கொடையாளர்’ என்றோம் அதற்கு அவர்கள் ‘இவ்விதம் கூறுங்கள், அல்லது இதில் சிலவற்றைக் கூறுங்கள் (இறைவனுக்குரிய அடைமொழிகளைக் கொண்டு என்னை வர்ணிப்பதன் மூலம்) உங்களுக்கு உறுதுணையாக ஷைத்தானை அழைக்காதீர்கள்’ என்று கூறினர்.

அறிவிப்பு: மத்ரஃப் இப்னு அப்துல்லாஹ் நூல்: அபூதாவூது,

இப்னுமர்யமைக் கிறிஸ்தவர்கள் மிகைப்படப் புகழ்ந்தது போன்று, நீங்கள் என்னை மிகைப்படப் புகழாதீர்கள். எனினும் (என்னை) அல்லாஹ்வுடைய அடியார் என்றும், தூதர் என்றும் கூறுங்கள், என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதை உமர்(ரழி) கேட்டதாக உரைத்ததை நான் கேட்டேன்.

*அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ்(ரழி), நூல் : ரஜீன்*

ஒரு பொழுது நபி(ஸல்) எங்கள் முன் தோன்றினர். அப்போது நாங்கள், “யாரசூலல்லாஹ்! தங்களுக்கு எவ்வாறு சலாம் உரைப்பது? என்பதை அறிந்துள்ளோம். ஆனால், தங்கள்மீது எவ்வாறு சலவாத்து கூறுவது?’ என்று வினவினோம். அதற்கு நபி(ஸல்) “அல்லாஹு்ம் சல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா சல்லைத்த அலா இப்றாஹீம இன்னக ஹமீதும் மஜீத், அல்லாஹு்ம்ம பாரிக் அல முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்றாஹீம இன்னக ஹமீதும் மஜீத்” என்று கூறுங்கள் என்று கற்றுத்தந்தனர்.

*அறிவிப்பவர் : கஃபுப்னு உஜ்ரா(ரழி),*
*நூல் : புகாரி, முஸ்லிம், அபூதாவூது, திர்மிதி, நஸயி*

சலவாத்தில் சிறிய மாறுதல்களோடு இதனைப் போன்ற ஹதீஸ்களை அபூ மஸ்ஊதில் பதரிய்யி(ரழி), அபூஹு்மைதிஸ்ஸாயி திய்யி(ரழி) ரிவாயத்துச் செய்ததாக புகாரி, முஸ்லிம், முஅத்தா, அபூதாவூத், நஸயி ஆகிய நூல்களில் காணக்கிடைக்கின்றன.

அல்லாஹ் அல்லாத இறைவன் இல்லை எனச் சாட்சி கூறுகிறேன் முஹம்மது(ஸல்) அல்லாஹ்வின் தூதராக இருக்கிறார்கள் என நான் சாட்சி கூறுகிறேன் என்று நாளின் 24 மணி நேரமும் உலகெங்கும் நீங்காது ஒலித்துக் கொண்டிருப்பதைவிட இவர்கள் நபி(ஸல்) அவர்களின் புகழை உயர்த்தி விட முடியுமா?

நபி(ஸல்) அவர்களின் புகழை எந்த அளவு உயர்த்த வேண்டுமோ அந்த அளவிற்கு அல்லாஹ் உயர்த்திவிட் டான். அதற்குமேல் நபி(ஸல்) அவர்களின் புகழை யாராலும் உயர்த்த முடியாது என்பதைத் அல்குர்ஆன் வசனமும், உறுதிப்படுத்துகிறது. நபி(ஸல்) அவர்கள் மீது சலவாத்துச் சொல்லும் முறையை நபித்தோழர்களே நபி(ஸல்) அவர்களிடமிருந்து, கேட்டுக் கற்றுக்கொண்டார் கள். அவர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப கன்னா, பின்னா என்று சொல்லவில்லை. அதற்கு அனுமதிக்கப்படவுமில்லை. இதனை ஹதீஸ்களும் மெய்ப்பிக்கின்றன. நபித்தோழர்களே துணிவு பெறாத ஒரு செயலில் அதற்குப் பின்னே வந்தவர்கள், தங்கள் விருப்பத்திற்குச் ‘சலவாத்து’ அமைத்து ஓதுகிறோம் என்று சொன்னால், நபி(ஸல்) அவர்களைப் புகழ்வதாகச் சொல்லிக் கொண்டு கன்னா, பின்னா என்று கவிகளைப் பாடி வைத்தால், அவற்றை முஸ்லிம்களும் மிகப் பக்தி ஈடுபாட்டோடு ஓதுவதால் கைரும், பரக்கத்தும் உண்டாகும், நாட்டங்கள் நிறைவேறும் என்று நம்பினால், இதை வழிபாடு என்று சொல்வதா? வழிகேடு என்று சொல்வதா? அன்புகூர்ந்து ஆத்திரப்படாமல் சிந்தியுங்கள். நபி(ஸல்) அவர்களால் கற்றுத்தரப்படாத சலவாத்தாக இருக்கட்டும்; அவர்களைப் புகழ்ந்து பாடப்பட்ட கவிகளாக இருக்கட்டும். அவை இறைவனால் ஏற்றுக்கொள்ளப் படாமல் நிராகரிக்கப்படும் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள்.

சலவாத்து ஓதுவதை, நபி(ஸல்) அவர்கள்மீது புகழ்பாடுவதாகத் தப்பாக மக்கள் புரிந்து வைத்திருக்கிறார் கள். நபி(ஸல்) அவர்கள் கற்றுத்தந்த சலவாத்தை உற்று நோக்குங்கள். அதில் அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்கிறோமா? அல்லது புகழ்கிறோமா? **‘இப்றாஹீம்(அலை) அவர்கள் மீது எப்படிச் சாந்தியையும் அபிவிருத்தியையும் பொழிந்தாயோ அதே போல் நபி(ஸல்) அவர்கள் மீதும்,**

**அவர்களைச் சார்ந்தவர்கள் மீதும் சாந்தியையும், அபிவிருத்தியையும் பொழிவாயாக அல்லாஹ்வே என்று'** அவர்களுக்குத் துஆ செய்கிறோம். ஆம்! இந்தச் சலவாத்தின் வாயிலாக நபி(ஸல்) அவர்கள் ஒரு மாபெரும் உண்மையை நமக்குக் கற்றுத் தருகிறார்கள். '**தவ்ஹீதை**' முறையாக உலகில் நிலை நாட்டுவதில் முழு வெற்றி பெற்றவர்கள் நபி(ஸல்) அவர்களே ஆவார்கள். அவர்கள் கற்றுத் தந்த சலவாத் திலும், அந்தத் 'தவ்ஹீதையே' உறுதிப்படுத்தப்படுகின்றது. முன்னுள்ள மக்கள் தங்கள் நபிமார்களையே, மூடத்தனமாக வணங்கும் குற்றத்திற்கு ஆளாகிவிட்டார்கள். அந்தத் தவற்றுக்குத் தன் உம்மத்தும் ஆளாகிவிடக் கூடாது என்பதற்காக, முன் விழிப்பாகச் சலவாத்திலேயே அதைக்கற்றுத் தருகிறார்கள் நபி(ஸல்) அவர்கள். ஜுஅதாவது அல்லாஹ் ஒருவன் மட்டுமே தேவையற்றவன் முஹம்மதாகிய நான் மிகமிகத் தேவையு டையவன்து என்பதைத் தன் உம்மத்து தன்மீது மிகுதி யாகச் சலவாத்து ஓதுவது கொண்டு நினைவுபடுத்து வதனால், தவ்ஹீதில் நிலைபடச் செய்கிறார்கள். எக் காரணம் கொண்டும் அல்லாஹ்வுக்குரிய வர்ணிப்பு களைத் தனக்காகத் தன்னுடைய உம்மத்து செய்து விடக்கூடாது என்பதைச் சலவாத்தின் வழி நபி(ஸல்) கற்றுத் தருகிறார்கள். கருத்து இவ்வளவு தெளிவாக இருந்தும், நம்மவர்கள் நபி(ஸல்) அவர்கள் மீது சலவாத்து சொல்வதாக, புகழ்வதாகச் சொல்லிக் கொண்டு, அவர் கள் மனம்போன போக்கெல்லாம் சொல்லி வைத்தால், இவை இறைவனால் அங்கீகரிக்கப்படுமா? சிந்தியுங்கள்.

அடுத்து, கவிதைகள் நம்மவர்களால் மார்க்கத்தில் ஒரு முக்கிய அம்சமாக ஆக்கப்பட்டுள்ளது. எதை எடுத்தாலும் கவிதை மயமாக்க முயன்று வருகிறார்கள். இது மிகப்பெரும் வழிகேடு என்பதைக் குர்ஆன், ஹதீஸ்கள் மூலம் அறிய முடிகிறது.

**"(தூதராகிய) அவருக்கு நாம் கவிதை (இயற்றக்) கற்றுக்கொடுக்கவில்லை. அது அவருக்குத் தகுமானதல்ல"**

**அல்குர்ஆன் 36:69**

**"கவிஞர்களை வீணர்களே (வழி கேடர்களே) பின்பற்றுவார்கள். நிச்சயமாக அவர்கள் பள்ளத்தாக்கு களில் அலைந்து திரிவதை நீர் பார்க்கவில்லையா? அவர்கள் செய்யாததையெல்லாம் சொல்வார்கள்."**

*அல்குர்ஆன் 26:224,225,226*

குரைஷ்காஃபிர்கள் நபி(ஸல்), அவர்களைக் கவிஞர் என்றும், குர்ஆனைக் கவிதை என்றும் குற்றம் சாட்டினார்கள். அது கற்பனை, உண்மையன்று என்று சொல்வதே அவர்கள் நோக்கம். அல்லாஹ் அதை மறுத்துக் கவிஞரல்லர், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர், அல்குர்ஆன் கவிதையன்று, நல்லுபதேசம் செய்யக் கூடியது என்று பல இடங்களில் வலியுறுத்திக் கூறுகிறான். கவிதை என்றால், அதில் கற்பனை கலந்திருக்கும் உண்மை இருக்கமுடியாது என்று குரைஷ் காஃபிர்கள் விளங்கி யிருந்ததை நம்மவர்கள் விளங்க முடியாமல் இருப்பது வியப்பாக இருக்கிறது.

**"பள்ளியில் பழிக்குப்பழி கொலை செய்வதையும், அதில் கவிகள் பாடுவதையும், (அல்லாஹ்வுடைய) தண்டனைகளை நிறைவேற்றுவதையும் நபி(ஸல்) அவர்கள் தடை செய்தனர்."**

*அறிவிப்பவர் : ஹகீமுப்னு ஹிசாம்(ரழி), நூல் : அபூதாவூத்*

**"நபி(ஸல்) பள்ளியில் விற்பதையும், வாங்குவதையும், தவறி விட்டதைத் தேடுவதையும், கவிபாடுவதையும் வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்கு முன்னர் அங்கு கூட்டமாகக் கூடுவதையும் தடைசெய்தனர்".**

*அறிவிப்பவர் : ராவி அம்ருப்னுஷுஐப்(ரழி), நூல் : ஸுனன்*

கவிகள் பற்றி குர்ஆனையும், ஹதீஸ்களையும் ஆராயும்போது மார்க்க முறையில் கவிகளுக்கு இடமில்லை என்பதே தெளிவாகின்றது. நபி(ஸல்) அவர்களும், நபித்தோழர்களும் கவி பாடியுள்ளதாக ஹதீஸ்களில் வந்துள்ளதே என்று கேட்கலாம். எந்தச் சூழலில் எங்குப் பாடியதாக வந்துள்ளது என்பதையும் பார்க்க வேண்டும். யுத்த போர்ச் சூழலில், களத்தில் வைத்துப் பாடியுள்ளார்கள். அங்குத் துன்பங்களை மறந்து,

ஊக்கத்தோடு போர் நடந்துள்ளது. பாரம் சுமக்கும் ஒட் டகம் சுமையை மறந்து வேகமாகப் பாலைவனத்தில் செல்லவும், அன்று கவிகள் பாடினார்கள். போர்கள் முஸ்லிம்கள் மீது நிர்ப்பந்தமாகத் திணிக்கப்பட்டன, அவற்றைத் தவிர்த்துக்கொள்ள முடியவில்லை. அதனால் தான் இஸ்லாம் அடியோடு ஒழிக்க விரும்பிய அடிமைகள் சிக்கலையும், உடனடியாகத் தீர்க்க முடியவில்லை. அதேபோல் பழிக்குப் பழி கொலை செய்தல், கவிபாடுதல் இவை போர்க்களத்தில் தவிர்க்க முடியாமல் போய்விட் டன. ஆகவே போர்க் களத்தில் கவிபாட நபி(ஸல்) அனுமதி கொடுத்தார்கள் பாராட்டினார்கள். பரிசும் கொடுத்திருக்கலாம். நபி(ஸல்) அவர்களும் ஓரிரு அடிகள் பாடி இருக்கலாம். பிரயாணத்திலும், சில சந்தர்ப்பங்களிலும் கவிகள் பாடச்சொல்லி நபி(ஸல்) கேட்டதாக ஹதீஸில் வந்துள்ளது.

ஆனால் மக்களுக்கு நல்லுபதேசமாகப் பள்ளியிலோ வெளியிலோ நபி(ஸல்) கவி பாடியதாகவோ, கவி பாடச் சொன்னதாகவோ தோழர்கள் பாடியதாகவோ எந்தச் சான்றும் இல்லை. பள்ளியில் கவிபாடுவதைத் தடை செய்தார்கள் என்றுதான் ஹதீஸ்களில் காணப்படுகின்றது. அல்லாஹ்வே குர்ஆனில் பல இடங்களில் நபி(ஸல்) அவர்கள் கவிஞர் அல்லர் என்று குரைஷ் காஃபிர்களின் கூற்றை மறுத்துக் கூறும் போது, நபி(ஸல்) அவர்கள் கவிபாடினார்கள், கனவில் வந்து கவியைக் கற்றுக் கொடுத்தார்கள் என்று சொல்பவர்கள், குரைஷ் காஃபிர் களுக்கு வக்காலத்து வாங்கி, அவர்கள் கட்சியில் சேரு கிறார்கள் என்றுதான் சொல்ல முடியும். விளங்கிக் கொண்டு திருந்த முன் வாருங்கள்.

அடுத்து இவர்களாக இயற்றிக்கொண்ட சலவாத்துகள், கவிகள், மௌலூதுகள், புர்தா இவற்றை மார்க்கத்தில் இணைக்க இவர்களுக்குக் கிடைத்த 'உரைகல்' குர்ஆனும், ஹதீஸுமன்று. அவற்றால் இவர்களுக்குக் கிடைக்கும் அனுபவம், கனவுக் காட்சிகள், நோய், பேய், கஷ்ட, நஷ்டம் இவற்றிலிருந்து கிடைக்கும் நிவாரணம், ஏற்படும் கைர்பரக்கத்து இவைதாம். கைசேதம்! நம்மவர்களுடைய நிலையைப் பார்த்தீர்களா? அப்படி என்றால், புதைகுழிகளிடம் சென்று முறையிடுவதால், இது

போன்றவற்றிலிருந்து நிவாரணம் கிடைப்பதாகத் தெரிகின்றதே, சர்ச், கோயில், குளம், குட்டை, சிலை என்று சென்று முறையிட்டாலும், நிவாரணம் கிடைப்பதாகத்தானே தெரிகின்றது. அதனால்தானே கோடிக்கணக்கான ரூபாய்கள் உண்டியலில் சேருகின்றன. அப்படி என்றால், இவற்றையும் மார்க்கத்தில் இணைத்துவிட வேண்டியதுதானா? இது சரிதானா? அறிவுடைமைதானா?

இன்று நம்மவர்களுக்கிடையில், இவர்களால் இயற்றப்பட்ட சலவாத்துக்கள், மௌலூதுகள், கவிகள், புர்தா இவை அனைத்தும் மறுமையின் நன்மையைக் கருதி ஓதப்படுவதில்லை நோய், பேய், கஷ்ட, நஷ்டம் நீங்கி, உலகில் கைரும் பரக்கத்தும் ஏற்படத்தான் ஓதப்படுகின்றன. மாந்திரீகர்கள் மிகுதமாக இவற்றை ஓதி வருவார்கள். இதிலிருந்தே இவை மார்க்கச் சம்பந்தப்பட்டவையல்ல. ஷைத்தானின் வழியைப் பின்பற்றி அவர்கள் வழிகெட்டுச் செல்கிறார்கள் என்பது விளங்கும்.

அன்புச் சகோதரர்களேக்

நபி(ஸல்) அவர்கள் காட்டித்தராத அனைத்துச் செயல்களும் பித்அத். அனைத்துப் பித்அத்துக்களும் வழிகேடுகள். வழிகேடுகள் அனைத்தும் நரகிற்கு இட்டுச் செல்லும் என்ற ஹதீஸை இங்கு நினைத்துப் பாருங்கள். இவர்களால் இயற்றப்பட்ட சலவாத்துக்கள், மௌலூதுகள், கவிகள், புர்தா அனைத்திலும், நபி(ஸல்) அவர்களது போதனைக்கு மாற்றமாக, இறைவனுக்குரிய அடைமொழிகளைக் கொண்டு நபி(ஸல்) அவர்களை வர்ணிப்பதும், ஷிர்க், குஃப்ர் கவிகளும் மற்ற நபிமார்களை மதிப்புக் குறைவாகச் சொல்லும் கவிகளும் மலிந்து காணப்படுகின்றன. உதாரணமாகப் புர்தாவின் ஒரு கவியில் 'நாயகமே, இம்மை மறுமை நீங்கள் இட்டபிச்சை, லவ்ஹுல் மஃபூல் நீங்கள் சொல்லி எழுதப்பட்டதுதான்.' என்று பாடப்பட்டிருக்கிறது. அல்லாஹ்வுடைய வர்ணிப்புக்களை எல்லாம் நபி(ஸல்) அவர்களுக்கும், அல்லாஹ்விடம் கேட்க வேண்டியவற்றை எல்லாம், நபி(ஸல்) அவர்களிடம் கேட்டும், பாடக்கூடிய இடத்தில் நபி(ஸல்) அவர்கள் ஆஜராகி இருக்கிறார்கள் என்ற எண்ணத்திலும் கவிகள் பாடப்பட்டிருக்கின்றன.

முஹம்மதாகிய(ஸல்) என்னை மூஸா(அலை) அவர்களுக்குமேல் மேன்மைப்படுத்தாதீர்கள்.
*அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரழி), நூல் : புகாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி*

''யூனுஸ்(அலை) அவர்களைவிட நான் முஹம்மது(ஸல்) மிகவும் மேலானவர்'', என்று எந்த அடியானும் கூறுவது தகாது.

*அறிவிப்பவர் : ராவி. அபூஹுரைரா(ரழி), நூல் : புகாரி, முஸ்லிம், அபூதாவூது*

"(எல்லா) நபிமார்களையும் விட என்னை மேலானவர்" என்று கருதாதீர்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அபூஸயீது(ரழி), நூல் : அபூதாவூத்

இந்த ஹதீஸ்களுக்கு மாற்றமாக மௌலூது களிலும், புர்தாவிலும் பல கவிகள் காணப்படுகின்றன.

நூல் புகாரியில் காணப்படும், ''அல்லாஹ்வின் கலாமில் இல்லாத நிபந்தனைகளையிடும், மாந்தருக்கு என்ன கேடு நேர்ந்ததோ, அல்லாஹ்வின் கலாமில் இல்லாத நிபந்தனைகள் அனைத்தும் தள்ள வேண்டியவை. அவை நூறு ஷரத்துக்களாயினும் சரியே!'' என்ற ஆயிஷா(ரழி) அவர்களின் அறிவிப்பையும், அதே புகாரியில் காணப்படும் நபி(ஸல்) அவர்களின் ஹதீஸ்கள் எவை? எவை? என்று கவனித்து அதனை எழுதிக்கொள்க. ஏனெனில் உறுதியாகக் கல்வி அறிவு பழையதாகி மறந்துவிடும் என்றும், உலமாக்கள் தவறிழைத்து விடுவார்கள் என்றும் நான் அஞ்சுகிறேன். நபி(ஸல்) அவர்களின் ஹதீஸ்களைத் தவிர, வேறு யாதும் ஒப்புக்கொள்ளத்தக்கதாக இல்லை'' என்ற உமர் இப்னு அப்துல் ஆஜீஸ்(ரஹ்) அவர்களின் அறிவிப்பையும், ரஜீனில் காணப்படும் சிந்தித்து ஆராயாது குர்ஆன் ஓதுவதில் அதிக நன்மை இல்லை. விளங்கிச் செய்யாத வணக்கம் வணக்கமன்று, முழுக்க முழுக்க அறிவு படைத்தவர் எவரெனில், மக்களை இறைவனின் அருளைவிட்டு நம்பிக்கை இழக்கச் செய்யாதிருப்பவரும், இறைவனின் வெறுப்பைவிட்டு அவர்களை அச்சமற்று

இருக்கச் செய்யாதிருப்பவரும், குர்ஆனை விட்டும் குர்ஆன் அல்லாதவற்றின் பக்கம் அவர்களைத் திரும்பச் செய்யாதிருப்பவருமாவார் என்ற அலீ(ரழி) அவர்களின் அறிவிப்பையும், தயவு செய்து ஒவ்வொருவரும் சிந்தித்து, மார்க்கத்தை விட்டு எந்த அளவு நாம் விலகிச் சென்றிருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைய புரோகித உலமாக்களின் வழிகெட்ட நிலையை அன்றைய ஐந்தாவது சீரிய கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ்(ரஹ்) படம் பிடித்துக் காட்டியுள்ளார் என்பதையும் விளங்க வேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் மீது நமக்கிருக்கும் அன்பை பிரியத்தை எப்படித்தான் வெளிப்படுத்துவது என்று கேட் கலாம். அதற்கும் அல்லாஹ், குர்ஆனில் தெளிவாக வழி காட்டுகிறான்.

(நபியே!) கூறும், **''நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான். உங்கள் பாவங்களையும் மன்னிப்பான்.''** ***அல்குர்ஆன் 3:31***

(நபி(ஸல்) அவர்கள் உங்களுக்கு) **''எதைக் கொடுத்தாரோ, அதை எடுத்துக் கொள்ளுங்கள், எதைத் தடுத்தாரோ அதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.''** ***அல்குர்ஆன் 59:7***

**''அல்லாஹ்வையும், மறுமையையும் உறுதியாக நம்பி அல்லாஹ்வை நினைவு கூர்வோருக்கு, நிச்சயமாக நபி(ஸல்) அவர்களிடம் அழகிய முன்மாதிரி இருக்கிறது.''**

***அல்குர்ஆன் 33:21***

இந்த இறைவசனங்களைப் படித்து விளங்குபவர்கள், நபி(ஸல்) அவர்கள் மீது முஹப்பத்தைக் காட் டுவதென்றால், அவர்கள் நடந்து காட்டியபடி நடப்பதுதான். அவர்கள்மீது கவிபாடுவதோ மௌலூது ஓதுவதோ மீலாது நடத்துவதோ அல்ல என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். நம்மவர்கள் இவற்றைச் செய்து விட்டு, நபி(ஸல்) அவர்கள் செய்துகாட்டிய தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ் இவற்றை விட்டுவிடுகிறார்கள்.

இது தெளிவான ஷைத்தானின் ஏமாற்றல் என்பதை, இவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. இது வெளிப்படையான வழிகேடேயாகும்.

நபி(ஸல்) காட்டித்தந்த முறைப்படி ஒருமுறை சலவாத்து ஓதினால், **'ஓதுபவருக்கு அல்லாஹ் 10 வாழ்த்துக்களைச் சொல்கிறான்'** என்று நபி(ஸல்) அருளியுள்ளனர். தங்கள் விருப்பத்திற்குச் சலவாத்து அமைத்து ஓதினால், அதற்கு அல்லாஹ்வின் அங்கீகாரம் உண்டா? என்பது தெரியாது. அதனால் கிடைக்கும் உலக ஆதாயங்கள் அங்கீகாரம் ஆனதாக எண்ணக் காரணமாகாது அங்கீகாரம் வஹி வந்து கொண்டிருந்த நபி(ஸல்) அவர்களது நுபுவத்து காலத்தில் மட்டும்தான் கிடைத்திருக்க முடியும். நபி(ஸல்) அவர்களது மறைவுக் குப்பிறகு ஏற்பட்ட எந்தச் சடங்குக்கும் அல்லாஹ்வின் அங்கீகாரம் கிடைத்திருக்க முடியாது.

மார்க்க விஷயத்தில் மனித அறிவு செல்லாது. அல்லாஹ் சொன்னது மட்டும்தான் மார்க்கமாகும். நபி(ஸல்) நபித்துவ காலத்தில் தன்னுடைய கண்காணிப் பில் இருந்ததாக அல்லாஹ் சொல்கிறான். (52:48) ஹுதைபியா உடன்படிக்கையை உமர்(ரழி) போன்ற புகழ் மிக்கவர்கள் உட்பட அனைத்து நபித்தோழர்களும், பெரிய தவறான உடன்படிக்கை என்றே எண்ணினார்கள். அல்லாஹ் அதைத் தெளிவான வெற்றி உடன்படிக்கை என்று அறிவித்தான். அப்படியானால் பின்னர் தோன்றிய வர்களின் எண்ணங்களை எல்லாம் எப்படி மார்க்கமாகக் கொள்ள முடியும்? சிந்தித்து, சீர் திருந்துங்கள்.

அந்தப் பெரியார் சொன்னார், இந்தப் பெரியார் சொன்னார் அவர்கள் குர்ஆன், ஹதீஸ்களைத் தெரியாத வர்களா? தப்பாகவா சொல்லி இருப்பார்கள்? என்று அறிவைக் குழப்பிக் கொள்ளாதீர்கள். அல்லாஹ்வின் 'தாத்' உள்ளமை பற்றிச் சிந்திப்பவன் எப்படி வழிகெடு வானோ, அதே போல் இந்தச் சிந்தனையும் வழிகேட் டில் கொண்டு சேர்த்துவிடும். பெரியார்கள் சொன்னார்கள் என்று குர்ஆன், ஹதீஸ்களுக்கு மாற்றமாகச் சொல்லப் படும் சொற்களெல்லாம் ஈஸா(அலை) சொன்னதாகக் கிறிஸ்தவர்கள் நம்பும் சொற்களை ஒத்தவைதான். இவை

எல்லாம் செய்தித் தாள்களில் வதந்திகளாகச் சொல்லப்படு கிறது நம்பப் படுகிறது. கூறப் படுகிறது என்று சொல்லும் தரத்தைச் சார்ந்தவைதான். மௌலூது, புர்தா ஆரம்ப ஏடுகளைப் புரட்டிப்பார்த்தால் இந்த உண்மை விளங்கும். குர்ஆன், ஹதீஸ்கள் மாத்திரந்தான் ஐயத்திற்கிடமின்றி ஆதாரப்பூர்வமாக நிலைநாட்டப்பட்ட உண்மைச் சொற்களாகும்.

அன்புச் சகோதரர்களே

பெரியார்களின் பெயரால் புனையப்பட்டிருக்கும் கற்பனை, கட்டுக்கதைகளை எல்லாம் விட்டு விட்டு நபி(ஸல்) அவர்கள்மீது முறையாக முஹப்பத்து வைத்து குர்ஆன் போதிக்கும் தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ் இவற்றைக் கடைப்பிடித்து, நாம் விரும்புவதையே பிறருக்கும் விரும்பும் பண்பாளர்களாகவும், உண்மையான மார்க்கத் தைத் தப்லீஃ செய்யும் போதகர்களாகவும் நாம் செயல்படு வோமாக. ஆமீன்.

வெளியீடு : 6

தேதி 23.11.1984